அன்பான வாடிக்கையாளர்களே,

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின் கீழ் வருகின்ற தேவைப்படுத்தலொன்றினை அனுசரித்து, உங்களுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான வங்கித்தொழில் உற்பத்திகளை / சேவைகளை தெரிவுசெய்வதற்காக உங்களுக்கு உதவுவதற்கு முனைகின்ற முக்கிய விடய ஆவணங்களைக் கொண்ட தொகுதியொன்றினை நாம் தயாரித்துள்ளோம்.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் தனிப்பட்ட வங்கித்தொழில் வாடிக்கையாளர்களுக்காக கிடைக்கப்பெறுகின்ற கணக்குடன் தொடர்புபட்ட விசேட பொதிகள் அத்துடன் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளுடனும் சேர்த்து வேறுபட்ட வகையான இலங்கை ரூபாய் கணக்குகள் பற்றிய விரிவான விபரங்களை முக்கிய விடய ஆவணம் உங்களுக்கு தருகின்றது.

எனினும், சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களுக்கும் வங்கியின் கொள்கைகளில் அத்துடன் நடைமுறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் அமைவாக முக்கிய விடய ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் திருத்தத்திற்கு உட்படும் என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

நீங்கள் மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்வதற்கு விரும்புவீர்களாயின், பின்வரும் வழிகள் ஊடாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள் www.nationstrust.com அல்லது 24 மணி நேர அழைப்பு நிலையம் 011 4 711 411

கீழே தரப்பட்டுள்ள எவையேனும் உங்கள் கணக்குகள் தொடர்பில் உங்களிடம் ஏதேனும் முறைப்பாடு இருக்குமெனில், தயவுசெய்து முறைப்பாட்டு அறிவித்தலை உள்ளடக்குகின்ற எழுத்திலான சுருக்கமான அறிக்கையொன்றினை **முறைப்பாடுகள் தீர்மான அலுவலர், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, இலக்கம் 242, யூனியன் பிளேஸ், கொழும்பு – 02** என்ற முகவரிக்கு அனுப்புங்கள் அல்லது தொலைபேசி வாயிலாக **[+94(0)11 4711411]/ [customerservice@nationstrust.com]** என்ற மின்னஞ்சல் ஊடாக எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள், உங்களுக்கு நாம் விரைவாக பதிலளிப்போம்.

| கணக்கு பற்றிய விபரம் | வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள் | கட்டணங்கள் மற்றும் வேறு வங்கி அறவீட்டு வகைகள் | கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கிய நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| **நடைமுறைக் கணக்குகள்** | | | | |
| **நேஷன்ஸ் தனிப்பட்ட நடைமுறைக் கணக்கு**<br>இது வட்டியற்ற கணக்கு என்பதுடன் வங்கியின் பொதுவான கணக்காகும். | தனியாளுக்கு ஏற்ற விதத்தில் உருவாக்கப்பட்ட காசோலைப் புத்தகங்கள். | மாதாந்த சேவைக் கட்டணம் - மாதாந்த சாசரி மீதி ரூ. 10,000/-ஐ விட குறையுமாயின் இக்கட்டணம் அறவிடப்படும்<br><br>கணக்கை மூடும் கட்டணம் | நடைமுறைக் கணக்குகளுக்கான வங்கியின் நியம கணக்கு ஆரம்பிக்கும் படிவங்கள் பூர்த்திசெய்யப்பட்டு பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து ஏதேனும் வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br><br>• தேசிய அடையாள அட்டையின் பிரதி / செல்லுபடியான கடவுச் சீட்டுப் பிரதி<br>• வதிவிட முகவரி, தேசிய அடையாள அட்டையில் அல்லது கடவுச் சீட்டில் இருந்து வேறுபடுமாயின் | **தகைமையுடைய ஆட்கள்:**<br><br>• இலங்கையில் வதிக்கின்ற, செல்லுபடியான தேசிய அடையாள அட்டையினை/செல்லுபடி யான கடவுச்சீட்டினை வைத்திருக்கின்ற 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கை தேசத்தவர்கள்.<br>• குறைந்தபட்ச ஆரம்ப வைப்பு ரூ. 10.000/- ஆக இருக்க வேண்டும்.<br><br>• கணக்கில் குறைந்தபட்ச மீதி பேணப்படவில்லையாயின் சேவைக் கட்டணம் அறவிடப்படும். இக்கட்டணம்,<br>கணக்கில் மேலதிகப் பற்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முகவரியினை உறுதிப்படுத்துவதற்கு ஆவண ரீதியான சான்று அவசியமாகும். | வைத்தும் கூட அறவிடப்படக்கூடியது. |